## ஆகஸ்ட் - 09 - புதன்

### திருச்சிலுவையின் புனித தெரேசா பெனடிக்ரா

### “அவரின் நீதித்தீர்ப்புகள் உலகம் அனைத்திற்கும் உரியன” திபா -106 : 7

### முதல் வாசகம்: எண்13:1 -2.25 -33,14:1,26 –30,34– 35

ஆண்டவர் மோசேயிடம், ”இஸ்ரயேல் மக்களுக்கு நான் கொடுக்கும் கானான் நாட்டை உளவு பார்க்க ஆள்களை அனுப்பு. மூதாதையர் குலம் ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களுள் தலைவனாயிருக்கும் ஒருவனை நீ அனுப்ப வேண்டும்” என்றார். நாற்பது நாள்கள் நாட்டை உளவு பார்த்த பின் அவர்கள் திரும்பி வந்தனர்.அவர்கள் பாரான் பாலை நிலத்தில் காதேசில் இருந்த மோசேயிடமும் ஆரோனிடமும் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பிலுள்ள அனைவரிடமும் வந்தனர். அவர்களுக்கும் முழு மக்கள் கூட்டமைப்புக்கும் அவர்கள் செய்தி கொண்டு வந்தனர் நாட்டின் கனியையும் அவர்களுக்குக் காட்டினர்.அவர்கள் மோசேயிடம் கூறியது. நீர் எங்களை அனுப்பிய நாட்டுக்கு நாங்கள் சென்று வந்தோம் அதில் பாலும் தேனும் வழிந்தோடுகிறது. இதுவே அதன் கனி.ஆயினும் அந்நாட்டில் வாழும் மக்கள் வலிமை மிக்கவர்கள் நகர்கள் அரண் சூழ்ந்தவை, மிகப்பெரியவை. அத்துடன் ஆனாக்கின் வழி மரபினரையும் நாங்கள் அங்கு கண்டோம். அமலேக்கியர் நெகேபு நாட்டில் வாழ்கின்றனர் இத்தியர், எபூசியர், எமோரியர் ஆகியோர் மலை நாட்டில் வாழ்கின்றனர் கானானியர் கடலருகிலும் யோர்தானை ஒட்டியும் வாழ்கின்றனர்.காலேபு மோசே முன் மக்களை உடனே அமைதிப்படுத்தி, ”நாம் உடனடியாகப் போய் நாட்டைப் பிடித்துக் கொள்வோம் ஏனெனில் நாம் அதை எளிதில் வென்றுவிடமுடியும்” என்றார். ஆனால் அவருடன் சென்றிருந்த ஆள்கள், ”நாம் அம்மக்களுக்கு எதிராகப் போக முடியாது ஏனெனில் அவர்கள் நம்மிலும் வலிமை மிக்கவர்கள்” என்றனர்.இவ்வாறு அவர்கள் உளவு பார்த்து வந்த நாட்டைப் பற்றித் தவறான தகவலை இஸ்ரயேல் மக்களுக்குக் கொண்டு வந்தனர் அவர்கள் கூறியது. உளவு பார்க்கும்படி நாங்கள் சென்றிருந்த நாடு தன் குடிமக்களையே விழுங்குவதாய் இருக்கிறது. அதில் நாங்கள் கண்ட மனிதர் அனைவரும் மிகவும் நெடிய உருவத்தினர் அத்துடன் நெப்பிலிமிலிருந்து வருகிற ஆனாக்கின் புதல்வராகிய அரக்கரையும் கண்டோம் எங்கள் பார்வையில் நாங்கள் வெட்டுக்கிளிகள் போன்றிருந்தோம் அவர்களுக்கும் நாங்கள் அவ்வாறே காணப்பட்டோம். உடனே மக்கள் கூட்டமைப்பு முழுதும் உரத்த குரலில் புலம்பிற்று. மக்கள் அன்றிரவு அழுதுகொண்டே இருந்தனர். மேலும் ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் கூறியது. இப்பொல்லாத மக்கள் கூட்டமைப்பினர் எதுவரை எனக்கெதிராக முறுமுறுப்பர்? எனக்கெதிராக முறுமுறுக்கும் இஸ்ரயேல் மக்களின் முறுமுறுப்புகளை நான் கேட்டேன்.நீங்கள் அவர்களிடம் சொல்லவேண்டியது, ”ஆண்டவர் கூறுவதாவது. என் உயிர் மேல் ஆணை! என் செவிகளில்படுமாறு நீங்கள் சொன்னதையே நான் உங்களுக்குச் செய்வேன். எனக்கெதிராக முறுமுறுத்த, இருபது வயதும் அதற்கு மேலும் எண்ணப்பட்ட மொத்தத் தொகையினரான நீங்கள் இப்பாலைநிலதில் பிணங்களாக விழுவீர்கள்.நீங்கள் குடியிருக்கும்படி நான் வாக்களித்த நாட்டிற்குள் எப்புன்னே மகன் காலேபையும் நூன் மகன் யோசுவாவையும் தவிர ஒருவருமே வரமாட்டீர்கள். நீங்கள் நாட்டை உளவுபார்த்த நாள்களின் எண்ணிக்கைப்படி ஒரு நாளைக்கு ஒரு ஆண்டாக நாற்பது நாள்களுக்கும் நாற்பது ஆண்டுகள் நீங்கள் குற்றப்பழியைச் சுமப்பீர்கள் என்வெறுப்பையும் அறிந்துகொள்வீர்கள்.ஆண்டவராகிய நானே பேசியுள்ளேன் எனக்கெதிராக ஒன்று கூடிய இப்பொல்லாத மக்கள் கூட்டமைப்பு முழுவதற்கும் இதை நான் கட்டாயம் செய்துமுடிப்பேன் இப்பாலைநிலத்தில் அவர்கள் முற்றிலும் அழிந்தொழிந்து அங்கேயே மடிவார்கள்.”

**பதில்பாடல் :** உம் மக்கள் மீது இரங்கும்போது ஆண்டவரே என்னை நினைவுகூரும்

### நற்செய்தி : மத்தேயு15 : 21 – 28

அக்காலத்தில் இயேசு தீர், சீதோன் ஆகிய பகுதிகளை நோக்கிச் சென்றார்.அவற்றின் எல்லைப் பகுதியில் வாழ்ந்து வந்த கானானியப் பெண் ஒருவர் அவரிடம் வந்து, ”ஐயா, தாவிதீன் மகனே, எனக்கு இரங்கும் என் மகள் பேய் பிடித்துக் கொடுமைக்குள்ளாகி இருக்கிறாள்” எனக் கதறினார்.ஆனால் இயேசு அவரிடம் ஒரு வார்த்தைகூட மறுமொழியாகச் சொல்லவில்லை. சீடர்கள் அவரை அணுகி, ”நமக்குப் பின்னால் கத்திக்கொண்டு வருகிறாரே, இவரை அனுப்பிவிடும்” என வேண்டினர்.அவரோ மறுமொழியாக, ”இஸ்ரயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்” என்றார்.ஆனால் அப்பெண் அவர்முன் வந்து பணிந்து, ”ஐயா, எனக்கு உதவியருளும்” என்றார்.அவர் மறுமொழியாக , ”பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார்.உடனே அப்பெண், ”ஆம் ஐயா, ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே” என்றார்.இயேசு மறுமொழியாக, ”அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்” என்று அவரிடம் கூறினார். அந்நேரம் அவர் மகளின் பிணி நீங்கியது.

**தியானம்:** விடாப்பிடியான வேண்டுதலையும், அதன் வெற்றியையும் சுட்டிக்காட்டும் நற்செய்தியில், தாய்மையின் மேன்மையை வெளிக்கொணர “பிள்ளைகளுக்குரிய உணவை நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றபோது, “உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க் குட்டிகள் தின்னுமே” என்று கூர்மதியுடனும், அன்புடனும் சொலப்பட்டபதில் இயேசுவின் பாராட்டையும், நோயுற்ற மகளுக்கு நலத்தையும் பெற்றுக்கொண்டது. அந்தப்பெண், இயேசுவில் வைத்திருந்த நம்பிக்கை பலவிதங்களில் வெளிப்படுத்தப்பட்டாலும், அந்தப் பெண்ணின் பொறுமை, திகைப்படையச் செய்கிறது. அவளது வாழ்வில் மிகப்பெரிய துன்பம் நேர்ந்து மகள், தீய ஆவியினால் ஆக்கிரமிக்கப்பட்டு, குடும்பமே சித்ரவதை அனுபவித்துக் கவலையும், கண்ணீரும் வாட்டியெடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும், அதனை வெளியே காட்டாமல், துன்பங்களுக்கு மத்தியில் நம்பிக்கையோடு வாழக்கூடிய பெண்ணாக காணப்படுகிறாள். துன்பங்களோடு இயேசுவை அணுகுகிறபோது, இயேசுவின் பதில் அவளுக்குக் கோபத்தை வரவழைக்கவில்லை. மாறாக, எப்படியாவது, இயேசுவிடமிருந்து, வல்லமையைப் பெற்றுவிட வேண்டும் என்பதில், அவளது எண்ணம் அடங்கியிருக்கிறது. அந்த சோர்வுகளுக்கு மத்தியிலும், பொறுமையோடு இயேசுவுக்கு பதில் சொன்ன நிலை, நம்மை மலைக்க வைக்கிறது. வாழ்வை நாம் எப்படி அணுக வேண்டும்? எப்படி அணுகக்கூடாது என்பதற்கு ஏழைக் கனானேயக் கைம்பெண்ணின் வாழ்க்கை எமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. எமது வாழ்வில் துன்பம் வருகிறபோது, கவலை கொள்கிறோம். அந்த கவலை நம்மைச் சோர்வுறச் செய்கிறது. நமது வாழ்வு முடிந்து விட்டது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறோம். பின்னால் வரவேண்டிய சாவை, நாமே முன்னால் வரவழைத்து விடுகிறோம். துன்பம் வரும்போதுதான், நாம் அதிக திடமாக இருக்க வேண்டும். கடவுளை அதிகமாக நாடவேண்டும். நமது விசுவாசம் வலுப்பெற்றதாய் மாற வேண்டும். இறைவன் வாக்கு மாறாதவர். அவர் நமக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளார். அவற்றை அவர் உரிய காலத்தில் நிறைவேற்றுவார். நமது வாழ்விலும் இத்தகைய அருஞ்செயல்களை ஆண்டவர் தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றார். எனவே, நாள்தோறும் அவரது வாக்குறுதிகளை அறிக்கையிட்டு செபிப்போம்.